திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் வடக்கு சட்டமன்றத் தொகுதி, வெங்கமேடு பகுதியில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசிரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாவட்ட அமைப்பாளர், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் தலைமையில் வடக்கு மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.பார்த்திபன் வரவேற்புரையில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் ஆர்.ராஜீவ்காந்தி, திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், கழக பேச்சாளர் அ.நஸ்ரின் பானு ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜன், பகுதி செயலாளர் கொ. ராமதாஸ் உள்பட மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி BLA 2 பாக முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி கலந்து கொண்டு தேர்தல் களப்பணிகள் ஆற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேற்குத் தொகுதி சட்டமன்ற பொறுப்பாளர் மீனா ஜெயக்குமார், கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், ஆ.செந்தில்குமார், க.சின்னையன், ப.க.பழனிச்சாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமாரசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் மகாலிங்கம், ஆர்.பொன்னுசாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், ஒன்றிய கழக செயலாளர்கள் சு.குணசேகரன், ப.செங்கோட்டையன், தோப்பு சதாசிவம், பகுதி கழக செயலாளர்கள் வி.சி.நடராஜன், எஸ்.குமாரவடிவேல், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், அக்னி சந்துரு, வி.செல்வராஜ் குறிஞ்சி என். தண்டபாணி, க.லட்சுமணகுமார், கே.சந்திரசேகர், பாத்திமா, நாகரத்தினம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், BLA 2 பலர் கலந்து கொண்டனர்.

திருச்சி சித்திரை தேர் விழாவில் குளிர்பானம் அருந்தியதில் வயிற்றுப் போக்கு!

சுகாதார நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெறுவதால் திருச்சியில் குடிநீரில் கழிவுநீர் கலக்க வாய்ப்பில்லை!

சட்டப்பேரவையில் - சிறப்பு கவனஈர்ப்பில் அமைச்சர் கே.என்.நேரு உறுதி!

சென்னை, ஏப். 23 -

சட்டப்பேரவையில் சிறப்பு கவனஈர்ப்பில் அமைச்சர் கே.என். நேரு பதிலளித்து பேசுகையில் திருச்சி மண்டலம் 5, 10-வது வார்டில் குடிநீரில் கழிவுநீர் கலக்க வாய்ப்பில்லை என்று உறுதிபடத் தெரிவித்தார்.

திருச்சி உறையூரில் மண்டலம் 5-ல் 10-வது வார்டில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து உயிரிழப்பு ஏற்பட்டது குறித்த சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தி.வேல்முருகன், எஸ். எஸ்.பாலாஜி, வி.பி.நாகை மாலி, ஜி.கே.மணி, கே.ஜி.பிரின்ஸ் ஆகியோர் பேசியதற்கு பதிலளித்து நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:-

சிறப்புக் கவன ஈர்ப்பாக எதிர்க்கட்சி தலைவர் , உறுப்பினர் தி. வேல்முருகன் , உறுப்பினர் எஸ். எஸ்.பாலாஜி , உறுப்பினர் வி.பி. நாகை மாலி , உறுப்பினர் ஜி.கே. மணி , உறுப்பினர் ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் உரையாற்றி, திருச்சி மாநகராட்சியிலே குடிநீரில் கழிவு நீர் கலந்து பாதிக்கப்பட்டிருப்பதாக இங்கு சொன்னார்கள். நான் அதனைப் பற்றி முழுமையாக, விளக்கமாக எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்சி மாநகராட்சி, உறையூர் பகுதி, வார்டு எண் 10, மின்னப்பன் தெரு மற்றும் வார்டு எண் 8, பணிக்கன் தெரு ஆகிய பகுதிகளில் 18.4.2025 அன்று மாலை, வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கால் 7 நபர்கள் பாதிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து, மாநகராட்சி சுகாதாரத் துறை மூலம் உடனடியாக நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. திருச்சி மாநகராட்சியின் சுகாதாரத் துறை மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் உட்பட 286 பணியாளர்கள் கொண்ட குழு உடனடியாக அமைக்கப்பட்டு, உறையூர் பகுதியில் 1,492 வீடுகளில் வசிக்கும் சுமார் 6,416 பொது மக்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை, தொற்றுநோய் தடுப்பு மற்

றும் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதியைச் சார்ந்த 42 நபர்கள், ஆண்கள் 15, பெண்கள் 23, குழந்தைகள் 4 திருச்சி அரசு மருத்துவமனையிலும், 11 நபர்கள் ஆண்கள் 3, பெண்கள் 6, குழந்தைகள் 2 தனியார் மருத்துவமனையிலும், மொத்தம் 53 நபர்கள் உள்நோயாளிகளாகச் சிகிச்சைப்பெற்று வருகின்றனர். வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு பாதிப்பு ஏற்பட்ட வார்டு எண் 10, மின்னப்பன் தெரு மற்றும் வார்டு எண் 8, பணிக்கன் தெரு ஆகிய பகுதிகளில் 9 சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு, சிறப்பு மருத்துவர்கள்மூலம் 28 நபர்கள் வெளிநோயாளிகளாகச் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களில் 5 நபர்கள் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்பட்டு, சிகிச்சைப் பெற்று குணமடைந்துள்ளனர். மாநகராட்சி சுகாதாரப் பணியாளர்கள்மூலம் 11,875 நபர்களுக்கு முன்னெச்சரிக்கைத் தடுப்பு மருந்துகள், டாக்டர்களின் மாத்திரைகள் மற்றும் ORS packetகள் வழங்கப்பட்டுள்ளன. சுகாதார துறைமூலம் 6 இடங்களில் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, திருச்சி மண்டல நீர் பகுப்பாய்வகத்திற்கு ஆய்வு செய்ய அனுப்பப்பட்டுள்ளது.

10 கண்காணிப்புக் குழுக்கள்!

மேலும், 10 கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அனைத்து வீடுகளுக்கும் நேரடியாகச் சென்று இப்பகுதி மற்றும் அருகாமையில் உள்ள பகுதிகளில் தீவிர தொற்றுநோய் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தொடர் கண்காணிப்பில் உள்ளது. திருச்சி மாநகராட்சி, வார்டு எண் 10, மின்னப்பன் தெருவைச் சார்ந்த பிரியங்கா என்ற நான்கு வயது குழந்தை 19.4.2025 அன்று இறந்ததைத் தொடர்ந்து, அவரது உடல் பரிசோதனை செய்யப்பட்டது.

முதற்கட்ட பிரேத பரிசோதனை அறிக்கைமூலம், இவர் வயிற்றுப் போக்கினால் உயிரிழந்தார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் கண்டறியப்படவில்லை. மேலும், பத்திரிகை செய்திகளில் வெளிவந்த, மூன்று நபர்கள் பலி என்ற செய்தி முற்றிலும் உண்மைக்கு மாறானது. பாண்டமங்கலம், அக்ரஹாரத்தைச் சேர்ந்த 90 வயது மூதாட்டி திருமதி லட்சுமி என்பவர், 10 நாட்களாக உடல்நலம் குன்றி 19.4.2025 அன்று இயற்கை எய்தினார். மேலும், மின்னப்பன் தெருவில் வசிக்கும் திருமதி லதா, வயது 53 என்பவர் இதயநோய் பிரச்சினை காரணமாக 18.4.2025 அன்று நள்ளிரவில், நெஞ்சுவலி காரணமாக வீட்டிலேயே உயிர் பிரிந்தது. எனவே, மூன்று நபர்கள் பலி என்பது ஆதாரமற்ற உண்மைக்கு மாறான செய்தி என்பதைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். இவ்வயிற்றுப்போக்கு அருகிலுள்ள கிராமப் பகுதிகளிலும் காணப்படுகிறது.

இப்பகுதிகளில் நடந்த சித்திரை தேர் திருவிழாவில் உணவு, மோர் மற்றும் குளிர்பானங்கள் அருந்தி பாதிக்கப்பட்டதால், இவ்வயிற்றுப் போக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். குடிநீர் குழாய்கள் மாநகராட்சி பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் வெவ்வேறாக உள்ளதால், இதற்கு குடிநீர் காரணமாக இருக்க வாய்ப்பில்லை. இருப்பினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, குழாய் மூலம் குடிநீர் விநியோகம் முழுவதுமாக நிறுத்தப்பட்டு, tanker lorryமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டதில் குடிக்கத் தகுதியான குடிநீர்தான் என்று அறிக்கை வரப்பெற்றுள்ளது. மேலும், 19.4.2025 அன்று 39 நபர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, நல்ல நிலையில் உள்ளனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

20.4.2025 அன்று 14 நபர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலம் நல்ல நிலையில் உள்ளனர். இதன் மூலம் நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது தெளிவாகிறது என்பதையும், சுகாதார நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கே வெக்காளியம்மன் கோயில் திருவிழா நடைபெறுகிறது. வெக்காளியம்மன் கோயில் திருவிழா நடைபெறும்போது, பொதுமக்களில் நிறைய நபர்கள் மோர் கொடுக்கிறார்கள், சில நபர்கள் குளிர்பானங்கள் தருகிறார்கள். அவ்வாறு தரப்பட்ட குளிர்பானத்தின் மீதுதான் சந்தேகம் ஏற்பட்டு, அந்தக் குளிர்பானத்தின் மாதிரி சேகரிக்கப்பட்டு, யார் அதை வழங்கினார்கள் என்பதை கண்டறிந்து, அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். குறிப்பாக, பல்வேறு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள், தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட இதுபோன்று இருப்பதை ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதை உறுதியாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எடுத்துக்கொள்ள இருக்கிறோம். மின்னப்பன் தெரு போன்ற பிற தெருக்கள் அனைத்தும் என்னுடைய தொகுதியான திருச்சிராப்பள்ளியைச் (மேற்கு) சார்ந்தது. தற்போது தான் ரூ.40 கோடியில் புதிய குழாய்கள் அங்கே பதிக்கப்பட்டு, குடிநீர் சிறப்பாகச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதில், அவரின் குடும்ப doctor certify செய்திருக்கிறார். இது குடிநீரால் வந்தது அல்ல, அவர் இயற்கை எய்தியிருக்கிறார், நான் அவரது குடும்ப doctor என்று, doctor ரீதரன் certificate கொடுத்திருக்கிறார்கள்.

எனவே, குடிநீரில் கழிவுநீர் கலப்பது என்பது அந்தப் பகுதியில் நிச்சயமாக இல்லை என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தினந்தோறும் நான் தொகுதியைச் சுற்றிப் பார்ப்பவன். எனது பகுதி: கிட்டத்தட்ட இருபது ஆண்டுகாலம் அங்கே சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக நான் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். எனது துறை. அந்தத் துறையையும் முதலமைச்சர் எனக்கு வழங்கியிருக்கிறார்கள். எனவே, குடிநீர் என்பது மிக கவனமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு பகுதியில் குடிநீர் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள்.

புதிய மேல்நிலை தீர்த்தேக்கத் தொட்டி!

அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட 50 இலட்சம் லிட்டர் கொள்ளவுக் கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு விரைவிலே திறக்கப்பட இருக்கிறது. முதலமைச்சர் திருச்சிக்கு வருகிறபோது திறக்க இருக்கிறார்கள். இன்னொன்று, கம்பரசன்பேட்டை பகுதியிலேயும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. அங்கே இந்த railway line இணைப்பு பணி முடிவுறுதலுக்காக காத்திருக்கிறது. எனவே, சீரான குடிநீர் விநியோகம் அந்தப் பகுதியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே கூறியதைப்போல தமிழ்நாட்டிலே மொத்தம் நாள் ஒன்றுக்கு, கிட்டத்தட்ட ஐந்தரை கோடி மக்களுக்கு 4,000 M.L.D அளவிலே தண்ணீர் வழங்கி கொண்டிருக்கிறோம். எங்கோ ஓர் இடத்திலே ஒரு சிறிய தவறு ஏற்பட்டிருக்குமானால் அதை பெரிய அளவிலே நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். அதை உடனுக்குடன் சரி செய்ய சொல்கிறோம். உறுப்பினர் தி. வேல்முருகன் , கழிவுநீர்த் தொட்டிகளை அகற்றும்போது உயிரிழப்பு ஏற்படுகிறது என்றும் பாதாள சாக்கடைத் திட்டம் நடைபெறுகிறபோது உயிரிழப்பு ஏற்படுகிறதென்றும் சொல்கிறார். கண்டிப்பாக ஒவ்வொரு இடத்திலும் அதற்கான அனுமதி பெற வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அந்தந்த இடத்திலே அதற்கான பாதுகாப்பு கருவிகள் இருக்கிறது.

வேண்டுமென்றே என்ன நினைக்கிறார்கள் என்றால், சம்பந்தப்பட்ட இல்லத்துக்காரர்கள், யாரையாவது ஒருவரை அழைத்து அங்குள்ள கழிவுநீரை சுத்தம் செய்கின்றபோது அங்கே gasனால் இறக்கிறார்கள். அதற்காக, உடனடியாக 15 இலட்சம் ரூபாய் அவர்களுக்கு நிதி ஒதுக்கித் தரப்படுகிறது. அரசு சார்பாகவும் தரப்படுகிறது. தனியார் contractors களினாலும் தரப்படுகிறது.

நம்முடைய உறுப்பினர் பாலாஜி சொன்னதைப் போல தனியாக அதற்கென்று ஒரு துறையை, துணை முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களினுடைய அனுமதியைப் பெற்று, முழுமையாக எந்த இடத்திலும் பொது மக்கள் பாதிக்கப்படாத அளவிற்கு நிச்சயமாக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தளவு குடிநீரில் கழிவு நீர் கலக்கப்பட்டதல்ல. நீர் மோர், குளிர்பானம் வழங்கியதால்தான் அந்தப் பகுதியிலே இந்த நோய் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு பதிலுரைத்தார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி சட்டமன்ற தொகுதி,திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் ஆலங்குடி பேரூராட்சி (வடகாடு முக்கம் பேருந்து நிலையம்) பகுதியில் திருவரங்குளம் மேற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் ஆலங்குடி பேரூர் கழகம் சார்பில்,கோடை காலத்தில் மக்களின் தாகத்தினை தீர்க்கும் வகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள "கோடைகால தண்ணீர் பந்தலை" பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், சர்பத், தர்பூசணி வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் திருவரங்குளம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.பி.கே.டி. தங்கமணி, ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம், மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு விராலிமலை கிழக்கு ஒன்றிய திமுக மற்றும் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் ஆவூர் நால்ரோட்டில் கோடை கால நீர் மோர் பந்தலினை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு வழங்கி சிறப்பித்தார்கள். நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம், ஒன்றிய கழக செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி, விளாப்பட்டி எம்.சிவா, ஒன்றிய கழக நிர்வாகிகள் எம்.பாண்டியன், ஆர்.நேரு, முத்துச்சாமி, எம்.ரவிச்சந்திலன், கே.பூபதி, சிவசண்முகம், நாகராஜன், ராஜா ஸ்டாலின், மகேந்திரன், தேவராஜ், விஜயகாந்த், எட்வின் ஜோ, முத்தழகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இரக்கம்மிகுந்தவராக - முற்போக்குக் குரலாக - அறநெறிசார் துணிவு - ஆழமான

மனித நேயத்துடன் திருபீடத்தை நடத்தியவர் போப் பிரான்சிஸ்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஏப். 23 -

திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

பரிவோடும், முற்போக்குக் கொள்கைகளோடும் கத்தோலிக்கத் திருச்சபையினை வழிநடத்தி, பெரும் மாற்றங்களை முன்னெடுத்த ஆளுமையான திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவு குறித்து அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

போப் பிரான்சிஸ் அவர்கள் இரக்கமிகுந்தவராக, முற்போக்குக் குரலாக, பணிவு, அறநெறிசார் துணிவு மற்றும் ஆழமான மனிதநேயத்துடன் திருப்பீடத்தை வழிநடத்தினார். வறியவர் மீதான அர்ப்பணிப்பு, புறக்கணிக்கப்பட்டவர்களுக்கான அரவணைப்பு, நீதி, அமைதி மற்றும் மதங்களுக்கு இடையிலான உரையாடலுக்கான அவரது முன்னெடுப்புகள் ஆகியவை கத்தோலிக்க உலகத்தைத் தாண்டியும் அவருக்கு பெரும் மரியாதையை பெற்றுத்தந்தன.

இரக்கமிகுந்த செயல்கள், மனிதநேயத்தில் நிலைக் கொண்ட மதநம்பிக்கை எனும் வளமான மரபினை அவர் விட்டுச் சென்றுள்ளார். அன்னாரது மறைவினால் தவிக்கும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் முடிவுற்ற பல்வேறு திட்டப் பணிகள்!

அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை, ஏப். 23 -

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முடிவுற்ற பல்வேறு திட்டப் பணிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 18.04.2025 அன்று திறந்து வைத்தார்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய பொதுமக்களின் நலன் காத்திடும் வகையில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், கிராமப்புறங்களில், குடிநீர் வசதி, சாலை வசதி, மின் வசதி, சுகாதார வசதி, புதிய அங்கன்வாடி மைய கட்டடம், அங்காடி கட்டடம், பேருந்து நிழற்குடை உள்ளிட்டவைகள் கட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், முடிவுற்ற பல்வேறு திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, திருமயம் ஊராட்சி ஒன்றியம், பனையப்பட்டி ஊராட்சியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடம் மற்றும் நியாய விலைக்கடை கட்டடத்தினையும், ராராபுரம் ஊராட்சியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றுடன் கூடிய குளியல் தொட்டியினையும், குலமங்களம் ஊராட்சி, மலையலிங்கபுரத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.14 லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடத்தினையும் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், திருக்களம்பூர், வார்ப்பட்டு மற்றும் அம்மன்குறிச்சி ஆகிய ஊராட்சிகளில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்களையும், வார்ப்பட்டு மற்றும் ஆலவயல் ஊராட்சி, மனத்தொண்டியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பயணியற் நிழற் குடை களையும், அம்மன்குறிச்சி ஊராட்சியில், ஊரணிக்கு முள்வேலி அமைக்கப்பட்டுள்ளதையும் திறந்து வைக்கப்பட்டது.

எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற நலத்திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு, தங்களது வாழ்வாதாரத்தினை உயர்த்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், வருவாய் கோட்டாட்சியர்கள் பா.ஐஸ்வர்யா (புதுக்கோட்டை), அ.அக்பர்அலி (இலுப்பூர்), பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, திருமயம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீனிவாசன், ஆர்.சங்கர், பொன்னமராவதி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலசுப்ரமணியன், வெங்கடேசன், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம் மற்றும் இரா. கணேசன், அ. அழகப்பன், இரா. மேகநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, அரியலூர் மாவட்ட கழக பொறியாளர் அணி சார்பில், அரியலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகில் அமைக்கப்பட்டுள்ள கோடைகால தண்ணீர் பந்தலை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர், நீர்மோர், வெள்ளரிக்காய், தர்பூசணி, கிர்ணிப்பழம் வழங்கினார். உடன் மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு,அரியலூர் நகர கழக செயலாளர் இரா.முருகேசன், அரியலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கோ.அறிவழகன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன்,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட அமைப்பு சார ஓடுனர் அணி அமைப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் இளம்பரிதி, அருண்சிவம், விக்னேஷ், செந்தமிழ்ச் செல்வன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

திருச்சி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட, முசிறி கைகாட்டியில் இளைஞர் அணி சார்பில் இந்தித் திணிப்பு , தொகுதி மறு சீரமைப்பில் பாரபட்சம், நிதி பகிர்வில் ஓர வஞ்சனை செய்யும் ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., உரையாற்றினார். நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் ஸ்டாலின் குமார், கதிரவன் மூத்த ஊடக வியலாளர் செந்தில்வேல், அவைத் தலைவர் அம்பிகாவதி, ஒன்றிய செயலாளர்கள் ராமச்சந்திரன், அண்ணாதுரை, செந்தில்குமார், வீரபத்திரன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திக், நகர செயலாளர் சிவக்குமார், கோட்டூர் முருகேசன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.